# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 07/பேரூ/2024**
**நாள் : 24.12.2024**

திரு. எஸ். நாராயணசாமி
நரசிம்மநாயக்கன்பாளையம்,
கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
நரசிம்மநாயக்கன்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், நரசிம்மநாயக்கன்பாளையம், ஜோதி காலனி, எண். 2/11 என்ற முகவரியில் வசிக்கும் திரு. எஸ். நாராயணசாமி என்பவரின் 06.01.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.02.2024 அன்று பெறப்பட்டு, 07/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், நரசிம்மநாயக்கன்பாளையம், ஜோதி காலனி, எண். 2/11 என்ற முகவரியில் வசிக்கும் திரு. எஸ். நாராயணசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

> "எப்பொழுது மழை பெய்தாலும் மழைநீர் எங்கள் வீட்டிற்குள் புகுந்து விடுகிறது. மழைநீர் வெறியேற முடியாதவகையில் இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த ஆக்கிரமிப்பாளர்களால் என் குடும்பத்திற்கு 5 வருடமாக கொலை மிரட்டல் வந்து கொண்டே உள்ளது. அதனால் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 15.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் நரசிம்மநாயக்கன்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கோரப்பட்டது.

3) நரசிம்மநாயக்கன்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 08.10.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார் :-

"மனுதாரர் வசிக்கும் வார்டு எண்.1–க்கு உட்பட்ட ஜோதி காலனி பகுதியானது கோவை மேட்டுப்பாளையம் பிரதான சாலையை ஒட்டி அமைந்துள்ள பகுதியாகும். மனுதாரரின் வீட்டின் முன்புறம், ஜோதி காலனி மனைப்பிரிவின் பொது ஒதுக்கீட்டு இடம் அமைந்துள்ளது. இப்பொது ஒதுக்கீடு இடம் தேசிய நெடுஞ்சாலையினை விட தாழ்வான பகுதியாக உள்ள காரணத்தினால் சென்ற ஆண்டு பெய்த கன மழையின் போது தேசிய நெடுஞ்சாலையில் வழிந்தோடிய நீரானது மனுதாரரின் வீட்டின் முன்புறம் உள்ள பொது ஒதுக்கீடு இடத்திற்குள் தேங்கியது. இதுகுறித்து புகார் கிடைக்கப்பெற்றவுடன் பேரூராட்சி பணியாளர்கள் மற்றும் ஜே.சி.பி. மூலம் உடனடியாக சாலையின் ஓரத்தில் மண்கொண்டு நிரப்பி, மனுதாரரின் வீட்டின் முன்புறம் தண்ணீர் தேங்குவது முற்றிலுமாக தடுக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி மனைப்பிரிவில் ஆக்கிரமிப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்ட இடமானது மனைப்பிரிவின் பொது ஒதுக்கீட்டு இடமாகும். இப்பொது ஒதுக்கீட்டு இடம் பேரூராட்சிக்கு தானபத்திரம் மூலம் மனைப்பிரிவு உரிமையாளரால் ஒப்படைப்பு செய்யப்படாமல் தனி நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது. பொது ஒதுக்கீட்டு இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டியுள்ள ஆக்கிரமிப்புதாரர்களுக்கும், பொது ஒதுக்கீட்டு இடத்தினை கிரையம் பெற்று கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ள காலி இடத்தின் உரிமையாளருக்கும், ஆக்கிரமிப்புகளை அகற்றிடுமாறு தெரிவித்து நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், பொது ஒதுக்கீட்டு இடத்தில் உள்ள காலியிடத்தினை கிரையம் பெற்றுள்ள திரு. ஆர்.பிரபு என்பவருக்கு நரசிம்மநாயக்கன்பாளையம் சிறப்புநிலை ரூராட்சி மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றிக்கொள்ள தெரிவித்து நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டதனை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.No.3137/2021ன் படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மாண்பமை நீதியரசர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவில், வருவாய்த்துறை மூலம் இடம் அளவீடு செய்து, விசாரணை மேற்கொண்டு உரிய உத்திரவு பிறப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கடந்த 06.09.2024 அன்று அளவீடு செய்யப்பட்டு, மேற்படி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் விபரம் தொடர்பான அறிக்கை வட்டாட்சியரிடம் இருந்து வரப்பெற்றுள்ளது " என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான நரசிம்மநாயக்கன்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 26.11.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.11.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. எஸ். நாராயணசாமி என்பவர் 26.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார் :-

"எனது வீட்டின் முன்புறத்தில் உள்ள இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டடங்கள் கட்டப்பட்டு உள்ளதால், கடந்த 2015–ஆம் ஆண்டிலிருந்து, வீட்டின் முன்புறத்தில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி வீட்டிற்குள் தண்ணீர் புகுந்து விடுகிறது. இதனால் எங்களது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகள் உள்ள பகுதியானது அரசு நிலம் என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர், நரசிம்மநாயக்கன் பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரிடம் முறையிட்டும், இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்வாறு புகார் தெரிவிப்பதால் கட்டட ஆக்கிரமிப்பாளர்களால் அச்சுறுத்தல்கள் இருந்து வருகிறது. எனவே, ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி வீட்டிற்குள் மழைநீர் தேங்காமல் இருப்பதற்கு ஆவன செய்யுமாறு இம்முறை மன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான நரசிம்மநாயக்கன்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி ரெ. செல்வஜெயந்தி என்பவர் 26.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார் :-

"மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இடமானது ஜோதி காலனி என்கிற மனைப்பிரிவின் பொது ஒதுக்கீடு இடமாகும். இப்பொது ஒதுக்கீடு இடத்தினை மனைப்பிரிவு உரிமையாளரால் தானப்பத்திரம் மூலம் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை. மனைப்பிரிவு உரிமையாளர் மேற்படி, பொது ஒதுக்கீடு இடத்தினை தனிநபர்களுக்கு விற்பனை செய்து கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. பொது ஒதுக்கீடு இடத்தில் கிரையம் பெற்ற இட உரிமையாளர் திரு. பிரபு என்பவர் ஆக்கிரமிப்பு அகற்றக் கோரும் பேரூராட்சியின் அறிவிப்பினை எதிர்த்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், நீதிமன்றமானது வருவாய்த் துறை மூலம் நில அளவீடு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என ஆணையிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற ஆணைப்படி, வருவாய்த் துறை மூலம் பொது ஒதுக்கீடு இடத்தினை அளவீடு செய்யப்பட்டதில், மேற்படி இடமானது வருவாய்த் துறை ஆவணங்களின் அடிப்படையில் ஆக்கிரமிப்பு செய்து கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன என அறிக்கை பெறப்பட்டுள்ளது. வருவாய்த் துறையின் அறிக்கையின்படி, பொது ஒதுக்கீட்டு இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டியுள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்கும் மற்றும் காலி இடத்தினை கிரையம் பெற்று உள்ள காலியிட மனை உரிமையாளருக்கும் பேரூராட்சி மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு 09.11.2024 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. இதன் தொடர் நடவடிக்கை இரண்டு மாத கால அவகாசத்தில் முடிக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" - என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மற்றும் நரசிம்மநாயக்கன்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கோயம்புத்தூர் மாவட்டம் , நரசிம்மன்நாயக்கன்பாளையம் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. S. நாராயணசாமி என்பவர் தனது 06.01.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் தனது வீட்டின் முன்புறத்தில் மழைக்காலத்தில் தண்ணீர் தேங்கி தனது வீட்டிற்குள் புகுவதாகவும், மழைநீர் வெளியேற முடியாத வகையில் இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன என புகாராக தெரிவித்து, மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கோரியுள்ளார்.

மனுதாரர் திரு. S. நாராயணசாமி என்பவர் வசிக்கும் குடியிருப்பின் முன்புறத்தில் ஜோதிகாலனி என்ற மனைப் பிரிவின் பொது ஒதுக்கீடு இடமாக உள்ள நிலையில், தானப்பத்திரம் மூலம் நரசிம்மநாயக்கன்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யாமல் இந்த பொது ஒதுக்கீடு மனைப் பிரிவுகளை மனை உரிமையாளரால் தனி நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார். இவ்வாறு பொது ஒதுக்கீடு இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து, கிரையம் செய்து மனைப் பிரிவினை பெற்ற தனி நபர்கள் கட்டடம் கட்டியுள்ளனர்.

இந்நிலையில் பொது ஒதுக்கீடு இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டடங்களை அகற்றக் கோரி உரிய அறிவிப்பு மூலம் பேரூராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், இவ்வறிவிப்பினை எதிர்த்து காலி இடத்தினை கிரையம் பெற்ற திரு. ஆர். பிரபு என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றதில் வழக்கு (வழக்கு எண்.W.P.No.3137 of 2021 and WMP No.3565 of 2021 in W.P.No3137 of 2021) தொடுத்தார். மேற்படி வழக்கில் மாண்பமை நீதிமன்றம் தனது 12.07.2024 நாளிட்ட ஆணையில் வட்ட நில அளவையர் மூலம் இடத்தினை அளவீடு செய்து, ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்டிருப்பின் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டப்பிரிவு 128 (1) (b)-ன்படி உரிய நடவடிக்கையை 12 வாரக் காலத்திற்குள் முடித்திட வேண்டும் என ஆணையிடப்படுள்ளது.

மேற்காணும் மாண்பமை உயர்நீதிமன்ற ஆணையினை செயல்படுத்திட புகாருக்குள்ளான இடத்தினை வருவாய்த் துறையால் அளவீடு செய்யப்பட்டதில், பொது ஒதுக்கீடு இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன என வருவாய்த் துறையானது தனது அறிக்கையை நரசிம்மநாயக்கன்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சிக்கு சமர்ப்பித்தது. இதனைத் தொடர்ந்து பொது ஒதுக்கீடு இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டடத்தை அகற்றக்கோரி ஆக்கிரமிப்பாளர்களுக்கும் மற்றும் கட்டடம் கட்டப்படாமல் நிலக் கிரையம் செய்துள்ள காலியிட மனை உரிமையாளருக்கும் பேரூராட்சியின் 09.11.2024 நாளிட்ட கடிதம் மூலம் உரிய அறிவிப்பு அனுப்பப்பட்டு உள்ளதையும், இந்நடவடிக்கை 2 மாத காலத்திற்குள் முடிக்கப்படும் என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடியும், மேற்காணும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.3137 of 2021 and W.M.P.No.3565 of 2021-ல் 12.07.2024 நாளிட்ட தீர்ப்புரையின்படியும் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நரசிம்மநாயக்கன் பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 24 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. எஸ். நாராயணசாமி,
   கதவு எண். 2/11,
   ஜோதி காலனி, நரசிம்மநாயக்கன்பாளையம்,
   கோயம்புத்தூர் மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
   நரசிம்மநாயக்கன்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி,
   கோயம்புத்தூர் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை – 28
4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயரிடப்பட்ட உரையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
   சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
~~இகோ~~/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

24/12/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032